

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., பொன்.முத்து, மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., பெ.சு.தி. சரவணன்.எம்.எல்.ஏ., எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

## மிசோரம் வாக்கு எண்ணிக்கை: டிச. 4-ந் தேதிக்கு ஒத்திவைப்பு!

மிசோரம்,டிச.3-

மிசோரமில் டிசம்பர் 3 ஆம் தேதி நடைபெறவிருந்த வாக்கு எண்ணிக்கையை டிச. 4 ஆம் தேதிக்கு இந்திய தேர்தல் ஆணையம் ஒத்திவைத்துள்ளது.

டிச. 3 அன்று மிசோரம் மக்களின் பண்டிகை தினம் என்பதால், தேதியை மாற்றக்கோரி பல்வேறு தரப்பிடம் இருந்து கோரிக்கை எழுந்ததால் வாக்கு எண்ணிக்கையை ஒத்திவைத்துள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 40 தொகுதிகளை கொண்ட மிசோரம் மாநிலத்தை மிசோ தேசிய முன்னணி ஆட்சி செய்து வருகின்றது. இம்மாநிலத்தின் 40 தொகுதிகளுக்கான சட்ட பேரவைத் தேர்தல், கடந்த நவம்பர் 7 அன்று ஒரே கட்டமாக நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட

# தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, டிச.3-

திராவிடப் போராளி அயோத்திதாசப் பண்டிதர், மண்டல் பரிந்துரையை அமல்படுத்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் ஆகியோருக்கு சிலைகள் அமைத்திட்ட, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

02.12.2023 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான எ.வ.வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### இரங்கல் தீர்மானம்

முன்னாள் மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் புதுப்பாளையம் ஒன்றியக்குழுத் தலைவருமான பொன்னிசுந்தரபாண்டியன் அவர்களின் தாயார் திருமதி க.கோவிந்தம்மாள் அவர்களின் மறைவிற்கும், போளூர் மத்திய ஒன்றிய செயலாளர் அ. சுப்பிரமணியன் அவர்களின் இளைய சகோதரர் அ.சம்பத் அவர்களின் மறைவிற்கும் இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

1891இல் திராவிட மகாசன சபை தோற்றுவித்தவரும், சாதி எதிர்ப்பு, சமூக சேவை, தமிழறிஞர், சித்த மருத்துவர் மற்றும் திராவிட இயக்கம் உருவாக வித்திட்ட

திராவிட போராளி அயோத்திதாசப் பண்டிதருக்கு, சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் சிலை அமைத்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகம் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

கிடைப்பது ஒரு துண்டு ரொட்டியானாலும், அனைத்து மாநிலங்களும் சமமாக பகிர்ந்து கொள்ளும் என்று பிரதமர் பொறுப்பேற்றவுடன் சொன்னவரும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, இந்தியா முழுக்க மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை, இடஒதுக்கீட்டை அமல்படுத்தியவரும், அதற்காக இந்திய பிரதமர் என்ற பொறுப்பையே தியாகம் செய்தவருமான வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் சிலை அமைத்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகம் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

டிசம்பர்17ல் சேலத்தில், இளைஞர்களின் எழுஞாயிறு, கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள திமுக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு, திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து 10ஆயிரம் இளைஞர்கள் சீருடையுடன், எழுச்சியுடன் கலந்து கொள்ள தக்க ஏற்பாடுகளை செய்திட இந்த மாவட்டக் கழகம் தீர்மானிக்கிறது.

நகரம் மற்றும் நகரத்தைச் சுற்றியுள்ள 8 கி.மீ., அடங்கிய பகுதிகளுக்கு பட்டா வழங்குவதற்கு தடை ஆணை உள்ளது. இப்பகுதியில் வீடுகட்டி வசிக்கும் பட்டா இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு பட்டா கிடைக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள், தற்காலிகமாக ஒரு வருடத்திற்கு இந்த தடைச் சட்டத்தை தளர்த்தி பட்டா வழங்குமாறு இந்த மாவட்டக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.ஆர்.சீதாபதி, ஆர்.சிவானந்தம், ஆர். வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ். விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, ஜெ.மெய்கண்டன், இரா. கார்த்திகேயன், பிரவீன்ஸ் ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம் சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ் குமார், கோ.எதிரொலி மணியன், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ். டி. கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல்பாஷா, ப.க.மணி வண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினிவினோத்திவாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிர மணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என். டி.மனோகரன், எஸ்.எஸ். அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி. வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணி ஏழுமலை ஒன்றியக்குழு, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் நன்றி கூறினார்.

### 4ம் தேதி திருப்பத்தூரில்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும்

# கழக இளைஞரணி கூட்டத்தில் 500 இளைஞர்கள் பங்கேற்க முடிவு!

## திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழக கூட்டத்தில் தீர்மானம்!

சிவகங்கை. டிச. 3-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் திரு நாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், ஒன்றியக்குழு தலைவருமான எஸ்.சண்முக வடிவேலு வருகிற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள மாநில இரண்டாவது இளைஞரணி மாநாட்டில் அதிகளவில் இளைஞர்கள் பங்கேற்பது குறித்தும், நாளை (4ம் தேதி-திங்கட்கிழமை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வைரவன்பட்டியில் நடைபெறும் இளைஞரணி பாசறைக்கூட்டம், சிவகங்கையில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் கழக இளைஞரணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பது குறித்தும், omr படிவம் பூர்த்தி செய்வது குறித்து விளக்கிப் பேசினார்

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1.வருகிற 4ஆம் தேதி திங்கட்கிழமை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வைரவன் பட்டியில் நடைபெறும் இளைஞர் பாசறை கூட்டத்திலும், சிவகங்கையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் கழக இளைஞர் அணி செயலாளர் மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் கூட்டத்தில் தெற்கு ஒன்றிய கழகத்திலிருந்து 500 இளைஞர்கள் பங்கேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

2.ஓ.எம்.என்.ஆர். படிவத்தினை விரைவில் பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்திலும் ஒப்படைப்பது.


3.வருகிற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் இரண்டாவது இளைஞர் அணி மாநில மாநாட்டில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் அறிவுரையின் படி திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் 300 இளைஞர்கள் சீருடையுடன் பங்கேற்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் முத்துராமன், சரசு சந்திரன், பார்த்தசாரதி, தங்கமணி, தவமணி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் மலை. ராதாகிருஷ்ணன், விவசாய,அணி பாண்டியன், முருகன், ஒன்றிய கவுன்சிலர் சகாதேவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா, கே. எம். பொற்கோ, கார்த்தி,மகாதீர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வைகை மாறன், துணை அமைப்பாளர்கள் வசந்த், எஸ்.ராஜா , நாகராஜன், பாலா,பிரபா, தொ.மு.ச. சண்முகநாதன் உட்பட ஊராட்சிக் கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள். முன்னதாக ஒன்றிய பொருளாளர் ஏ. எம். கண்ணன் வரவேற்றுப் பேசினார். ஒன்றிய துணைச் செயலாளர் பார்த்தசாரதி நன்றி கூறினார்.

# பாறைகள் சரியும் காலம்! மானுடம் நிமிரும் காலம்!!

## ‘கணையாழி’ தலையங்கம்!

வடக்கே
மண் பாறை சரிவிலிருந்து
தொழிலாளர்களின்
மீட்டெடுப்பு!




இங்கே
மனுதர்ம சரிவிலிருந்து
மானுடத்தை மீட்டெடுக்க உதவிய
மண்டல் நாயகருக்கு
மாநிலக் கல்லூரி வளாகத்தில்
சிலை திறப்பு!

ரிஷிகேஷ், ஹரிதார், கேதார்நாத்.
பத்ரிநாத் கங்கோத்ரி, யமுனோத்ரி
அடங்கிய தேவ பூமி! என்றெல்லாம்
கொண்டாடப்படும்
உத்தரகண்ட் சுரங்கப் பாதையில்
மண் பாறை சரிவு!

உத்தரகண்ட்
இந்தியாவின் 27 ஆவது மாநிலம்
இமயமலையின் நிலப்பரப்பு!

"எல்லா மக்களின் நலன்களையும்
பேணுவதைத் தவிர
வேறு முக்கிய வேலை எனக்குக்
கிடையாது."
என்று உறுதி கூறிய
மாமன்னன் அசோகன்
கட்டளைக் கல்வெட்டும் இருக்கும் இடம்!

அங்கேதான் நடந்திருக்கிறது
மண்பாறை நிலச்சரிவு!
இது முதல்முறை அல்லவாம்!
மண் சரிவு, பாறைச்சரிவு
நிலச்சரிவு மட்டுமின்றி
பனிச்சரிவும் அங்கே நடக்குமாம்!

இரண்டு கிலோ மீட்டர் உயரத்திலிருந்து
இமயமலையின் பனிப்பாறை
ஒரு நிமிட சரிவில் 2021 இல்
பெயர்ந்து விழுந்த வேகம்
ஹிரோஷிமா அணுகுண்டு
வேகத்தைவிட அதிகமாம்!

மோதிய வேகத்தில்
ஏற்பட்ட வெப்பத்தில்
உருகிப் பெருகி ஓடிவந்த வெள்ளம்
அடித்துக் கொண்டு போயிருக்கிறது
204 மனிதர்களின் உயிர்களையும்!
நல்ல வேளை இப்போது
41 தொழிலாளர்களும்
காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்!

அவர்கள் காப்பாற்றப்பட்ட செய்தியை
உலகிற்கு முதலில் அறிவித்தவர்
பொறியாளர் சந்திரன் என்ற
தமிழ்நாட்டுக்காரர்!

சுரங்க மண்சரிவில்
சிக்கியிருந்தவர்களில் ஒருவரும்
தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் இல்லை.

ஆனால் அவர்கள்
உயிரோடு இருக்க
உணவு, குடிநீர், மருந்து, மாத்திரையும்
நம்பிக்கை இழக்காமல் இருக்க
மின்சாரம். மின்னேற்றி,கேமராவும்
உள்ளே அனுப்ப உதவியிருப்பது
திருச்செங்கோட்டில் உள்ள
தரணி ஜியோ டெக் நிறுவனம்!

இப்போது வெளியில் வந்துவிட்டார்கள்!
இங்கிருந்தே சந்திராயனை நிலாவில்
இறக்கும்
தொழில்நுட்ப இந்தியாவில்
சுரங்கத்தில் சிக்கிக் கொண்டவர்களைக்
கரையேற்ற 17 நாட்கள்!

ஆயிரம் கிலோ மீட்டருக்கு
அப்பால் உள்ள இடத்தைக் குறிவைத்து
அழிக்க அனுப்பும்
ஏவுகணை தொழில்நுட்பம்
படுகுழியில் சிக்கிக்கொண்ட
தொழிலாளர்களை மீட்டெடுக்கும்
பயன்பாடு எப்போது வரும்?

எப்படியோ வெளிவந்துவிட்டார்கள்!
ஆனாலும் சுரங்கத்திலிருந்து
வெளியில் வந்து விடுகிற மூச்சில்
இன்னும் கூட அவர்களின்
மனச் சரிவின் வெளிப்பாடு!
எவ்வளவு மன உளைச்சலில்
இருந்திருப்பார்கள்?
குடும்பத்தை மீண்டும்
காண முடியுமா? என்ற பதற்றத்தில்
அவர்களின் குடும்பமும்
இருந்திருக்குமே!

துரத்தும் பயத்தில் தூங்க முடியாமல்
நினைவாற்றல் குறைந்து
முடிவெடுக்க முடியாமல்
இனிவரும் காலங்களையும்
எப்படி நகர்த்தப் போகிறார்கள்?

பயம் இல்லாமல் இரவு வானத்தைப்
பார்க்க முடிய வேண்டும்!
கண் சிமிட்டும் நட்சத்திரங்களும்
சரிந்து விழும் பாறைத்துளிகள் என்று
பதறாமல் இருக்க வேண்டும்!
இயல்பு நிலைக்கு வர இன்னும்
எவ்வளவு காலம் எடுக்கும்?
பயத்திலிருந்து விடுபட–
ஓடி ஒளிய நினைத்தால்
அது விடாது துரத்தும்!

தமிழ்நாட்டு முதல்வரைப் போல
நேருக்கு நேராகச் சந்திக்கத் துணிந்தால்
அது ஓட்டம் பிடிக்கும்!

சந்திக்கத் துணிந்த
மண்டல் நாயகர் வி.பி.சிங்.சிலையை
மாண்புமிகு முதலமைச்சர்
திறந்துவைத்திருக்கிறார்!

எதிர்பாரா விபத்தில்
பதினேழு நாட்கள் படுகுழியில்
இருந்தவர்கள்
இயல்பு நிலைக்கு வரவே
இவ்வளவு பிரச்சினைகள்!

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப்
படுகுழியில் கிடத்தப்பட்டிருந்த
மக்கள் மனநிலையை
மாற்றி, மீட்டெடுக்கப் பாடுபட்ட
கலைஞருக்கு.
வடக்கிலிருந்து கைகொடுத்த
வி.பி.சிங் குக்குத்
தமிழகத்தில் சிலை எடுத்து
மானுட நேயத்திற்கு
மகுடம் சூட்டி இருக்கிறார்
தமிழ்நாட்டு முதல்வர்!

மக்களை அச்சுறுத்தும்.
அரசாங்கம் மாறி
மக்களுக்கு அஞ்சும்
அரசாங்கம் உருவாகும் காலம் இது!

கால மாற்றத்தில்
இமயமலைப் பாறைகளும்
சரிந்து விழுகின்றன!
ஆனால் தாமதம் ஆனாலும்
பாதகப் படுகுழியிலிருந்து
போராடி வெளிவருகிறது
மானுட நேயம்!

அதன் குறியீடுதான்
மண்டல் நாயகர் சிலை திறப்பு!

ஆம்! இது
பாறைகள் சரியும் காலம்!
மானுடம் நிமிரும் காலம்!!




–நன்றி
‘கணையாழி’
டிசம்பர் - 2023